**செய்தி வெளியீடு எண்: 127/2023** **நாள்: 03.11.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**ICC ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை, 2023 போட்டிகளுக்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் வழங்கிய சேவைகள்**

நடப்பாண்டில் ஐசிசி ஆடவர் உலகக் கோப்பை போட்டி அக்டோபர் 5, 2023 அன்று தொடங்கியது. இப்போட்டி, தற்போது சென்னை உட்பட பத்து இந்திய நகரங்களில் நடைபெற்று வருகிறது.

சென்னை எம்.ஏ.சிதம்பரம் சேப்பாக்கம் மைதானத்தில் மொத்தம் 5 போட்டிகள் நடைபெற்றன. அனைத்து கிரிக்கெட் ரசிகர்களுக்கும் தடையற்ற பயணத்தை வழங்குவதற்காக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்துடன் (TNCA) புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டது. சென்னையில் நடைபெற்ற போட்டி நாட்களில் மெட்ரோ இரயில் சேவை நள்ளிரவு வரை நீட்டிக்கப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற முதல் 2 கிரிக்கெட் போட்டிகான பயணச்சீட்டு வைத்திருந்த பயணிகளுக்கு போட்டியை பார்த்துவிட்டு திரும்பும் போது மெட்ரோ இரயிலில் இலவச பயணம் வழங்கப்பட்டது. பின்னர், Book My Show உடன் இணைந்து, பயணச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு தடையற்ற நுழைவு மற்றும் வெளியேறலை எளிதாக்கும் வகையில், போட்டிக்கான பயணச்சீட்டுகள் க்யூ.ஆர். பார்கோடுடன் இணைக்கப்பட்டன. இதன் மூலம், கிரிக்கெட் போட்டிகான செல்லுபடியாகும் பயணச்சீட்டு வைத்திருப்பவர்கள், சென்னையில் நடைபெற்ற மீதமுள்ள மூன்று போட்டிகளுக்கும் கட்டணமின்றி மெட்ரோ இரயிலில் பயணம் செய்தனர். Book My Show மூலம் மெட்ரோ இரயில் நிலையங்களில் பயணச்சீட்டு சரிபார்ப்பு கியோஸ்க்குகளும் அமைக்கப்பட்டன.

மேலும், அரசினர் தோட்டம் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து போட்டி நடைபெற்ற சிதம்பரம் மைதானத்திற்கு மெட்ரோ இணைப்பு பேருந்துகளை வழங்கியதன் மூலம் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்தது. பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, வழிகாட்டுதல், பாதுகாப்பு சோதனைகள், போன்ற பணிகளுக்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கூடுதல் பணியாளர்களை நியமித்தது. மொத்தம் 25,000 கிரிக்கெட் ரசிகர்கள் இந்த சேவைகளைப் பயன்படுத்தியுள்ளனர், இது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பயணிகளுக்கு பாதுகாப்பான மற்றும் எளிமையான பயணத்தை வழங்க தொடர்ந்து முயற்சித்து வருகிறது என்பதைக் காட்டுகிறது.

இந்தியாவிலேயே முதன் முறையாக இது போன்ற மதிப்புமிக்க போட்டிகளுக்கான பயணச்சீட்டுகளில் நேரடியாக உட்பொதிக்கப்பட்ட பார்-கோடு வசதியுடன் கூடிய நுழைவு மற்றும் வெளியேறும் பயணத்தை வழங்கியதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**